1983 ஜனவரி 31]

வில்லையென்றால், மிகக் குறைவாக இருக்கிற பகுதிகளில், மிக ரெமோட்டான பகுதிகளில் இருக்கிற பிளாக்ரைட்டைப் பொறுத் வரைக்கும் தனியாருக்குக் கொடுக்கலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

சோளிங்கர் நகருக்கருகிலுள்ள மலைப் பகுதிகளில் கிடைக்கக் கூடிய கனிப்பொருள்.

*வினா எண். 77 திரு. சி. கோபால்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் சோளிங்கர் நகருக்கு அருகில் உள்ள மலைப்பகுதிகளில் கனிப்பொருள் ஏதாவது கிடைக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளனவா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: ஆம். இது 'டாமின்' நிறுவனத்தின் ஆய்விலுள்ளது.

கூடலூரிலுள்ள மைக்கா சுரங்கங்கள்.

*வினா எண். 78 திரு. கே. உச்சி:—மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூடலூரில் மைக்கா சுரங்கங்களைத் தனியார் அனுபவித்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், வருடம் ஒன்றுக்கு உற்பத்தியாகும் மைக்காவின் அளவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ் திருநாவுக்கரசு: (அ) ஆம்.

(ஆ) 1979-80 ஆண்டு 23 டன்னும் 1980-81 ஆம் ஆண்டு 58 டன்னும் மைக்கா அந்தப் பகுதியில் தோண்டி எடுக்கப் பட்டுள்ளது. ஏற்கனவே ஆரம்பத்திலே லீஸ் பெற்ற சுமார் 12 பேர்கள் அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

திரு, கே. உச்சி: தலைவர் அவர்களே, அந்த லீஸ், உரிமம் பெற்றவர்கள் எந்த அடிப்படையில் பெற்றிருக்கிறார்கள் என் பதையும் அதனால் அரசுக்கு என்ன இலாபம் கிடைக்கிறது என்றும் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, அரசுக்கு சீனரேஜ் கிடைக்கிறது? என்ன அடிப்படையிலே என்றால் அதிலே அடிப்படை ஒன்றும் இல்லை,